மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஒரு சில சிறிய பணிகளைத் தவிர மேலூர் வடக்கு ஒன்றியத்திற்கான பணிமனைக் கட்டடம் கட்டும் வேலை அநேகமாக முடிவுறும் தருவாயில் உள்ளது. இப் பணி 1969 செப்டம்பர் திங்கள் இறுதிக்குள் முடிவடைந்து ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அங்கு செயல்படுவதற்கு அக் கட்டடம் தகுதியுள்ளதாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இளையாங்குடி—இராசசிங்கமங்கலம் சாலை

* 218 வினா.—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், இளையாங்குடியில் இருந்து இராசசிங்கமங்கலத்துக்கு, கருஞ்சுத்தி, கரும்புக்கூட்டம், தொகவூர், பரத்தவயல், கடுக்கை, வண்டல், செங்குடி வழியாய் பாதை அமைத்துத் தரும்படி பொது மக்களிடமிருந்து நீண்ட காலமாக கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) சாலிகிராமம் சாருகணி சாலையில் மைல் 2/6-லிருந்து வண்டல் வழியாக ஆனந்தூருக்கு சாலை போடும் வேலைக்கு அரசு உத்தரவு அளித்துள்ளது. தொகவூர்—வண்டல் இணைப்புப்பாதை போடுவதற்கும் மேற்படி உத்தரவு பொருந்தும். இளையான்குடி வட்டத்தில் அடங்கிய போக்குவரத்து சாலைகளை அபிவிருத்தி செய்வது நெருக்கடியான நிதி நிலைமையால் அங்கீகரிக்கப்பட வில்லை. வண்டலிலிருந்து ராஜசிங்கமங்கலத்திற்கு செங்குடி வழியாக சாலை அமைப்பதும், ராஜசிங்கமங்கலம் கண்மாயில் பக்கச் சுவருடன் குறுக்குப் பாதையும் அமைப்பது ஏராள செல வாகுமாதலால் இவ்வேலை நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு பிற்பட்ட திட்டங்களில்தான் பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இராசசிங்க மங்கலத்திலிருந்து நமது எம்.எல்.ஏ. மலைக்கண்ணன் பகுதி வண்டலுக்குப் போவதாயிருந்தால் மழை காலத்தில் போட்டில் போனால்தான் முடியும், மற்றபடி அந்த இடங்களுக்குப் போக முடியாத கஷ்டமான நிலை இருக்கிறது. பொது மக்கள் இராச சிங்கமங்கலத்திலிருந்து 15 மைல் சுற்றி வரவேண்டிய நிலை இருக்கிறது. இதை மனதில் கொண்டு அதற்காக அதிக செலவாகும் என்பதை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், மக்களுக்கு அதிக சௌகரியம் செய்து கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் அந்தப் பகுதியில் ரோடு அமைத்து, அந்தப் பகுதி மக்களுக்கு நிவாரணம் அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தமிழ் நாட்டில் இளையாங்குடி, இராசசிங்கமங்கலம் பகுதியில் மட்டும் இப்படிப் பட்ட சங்கடம் இருக்கிறது என்பதில்லை. பல்வேறு பகுதிகளிலும்

1969 செப்டம்பர் 11]

இது போன்ற ஆக்கப் பணிகள் செய்து தர வேண்டியிருக்கிறது. ஆகவே, அங்கங்கே இருக்கிற மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் பணிகளுடைய அவசியத்தையும், அவசரத்தையும் உணர்ந்து, அவைகளுக்கான வரிசைக்கிரமங்களையும் நிர்ணயம் செய்து கொடுக்கின்றன. உறுப்பினர் அவர்கள் சொல்கிற திட்டத்திற்கு ரூ. 8.10 லட்சம் செலவு ஆகும் என்று அறியப்படுகிறது. கைப்பிடி சுவர்கள் எழுப்ப வேண்டும், இணைப்புச் சுவர்கள் எழுப்ப வேண்டும், குறுக்குப் பாதை போட வேண்டும். ஆக, இந்த அளவு பெரிய தொகை செலவழிக்க, கொஞ்ச காலம் பொறுத்திருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

Unauthorised night bus service

219 *Q.*—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

Whether unauthorised night bus services are being runn by some private operators between Madras and Tiruchirappalli daily by misusing the contract carriage permits issued to them?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: சென்னைக்கும்-திருச்சிக்கும் இடையில் இரவு நேரங்களில் ஓடிய சில பேருந்துகள் அனுமதியின்றி ஓடியதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, விதிகளை மீறிய குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநயகம்: அப்படியானல் அவர்கள் எத்தனை பேர்கள்? என்ன நடவடிக்கை அவர்கள் மீது எடுத்திருக்கிறீர்கள்? அதில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் அவர்களோடு ஒத்துழைத்து, 'நாங்களெல்லாம் காண்டிராக்ட் காரியேஜில் போகிறோம், பணம் கொடுக்கவில்லை' என்று சொல்லி, அவர்களுக்கு டிக்கெட் கொடுப்பதும் மறுக்கப்படுகிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: சென்னைக்கும்-திருச்சிக்கும் இடையே உள்ள வழித்தடங்களில் அனுமதியின்றி ஓடியதற்காக 15 பேருந்துகளின் மீது குற்றம் சாட்டப்பட்டு, மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு, 15 வழக்குகளில் 6 வழக்குகள் இன்னும் நடந்துகொண்டிருக்கின்றன. எட்டு வழக்கு களில் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வழக்கில் சாதகமாக தீர்ப்பு ஆகவில்லை, அதாவது, அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இவை திருச்சிக்கும், சென்னைக்கும் இடையே ஓடிய பேருந்துகள். அது தவிர, மேலும் 71 பேருந்துகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, இரவிலே ஓடுகிற பஸ்களைப் போலவே பல்வேறு ரூட்களில் ஓடுகின்ற டூரிஸ்டு பஸ்களின் ஏஜெண்டுகள் ரயில்வே ஸ்டேஷன், சர்க்கார் போக்கு வரத்து பஸ் ஸ்டாண்டு ஆகிய இடங்களில் நின்றுகொண்டு 'வாருங்கள், உடனடியாக அழைத்துச் செல்கிறோம்' என்று